(1)

வையம் படைத்தவனை மாபாரதியுடனே
மெய்யம் புயத்தவிசில் வீற்றிருந்தோன் — ஐயம்பு
பூத்தொளிர்ந்த தம்பியெனும் போர்வேளைத் தங்கரத்தால்
பார்த்தொளிர்ந்த பண்டைப் பழவரங்க — ஏத்தரிய
அந்தணன் தன்னுடனே அம்புவியாள் மட்டனை
வந்ததே வந்துதித்த மோனைப் பெண்; — செந்தமிழ்
கிட்டாத செந்திருவே; செம்மீர வேலவர்க்கும்
எட்டாத பச்சைக் கிளித்தோகை; கட்டாத

* மாபாரதி — சரஸ்வதி, அம்புயம் — தாமரை; தவிசு — ஆசனம்; (கமலத்துடன் நாமணந்தான் வீற்றிருக்கும் பிரமன்) ஐயம்பு — மலரம்புகளாகிய ஐந்து; (அவை: தாமரை, அசோகம், முல்லை, மாம்பூ, நீலம்) மன்மதன் திருமாலின் ~~[crossed out]~~ மகன்: பிரமன் தம்பி) வேள் — மன்மதன்; அம்புவி — அழகிய உலகம்; *

(2)

பூமாலை; சூட்டாத பொற்பாவை; கற்பகத்து
மாமாலை யாத்திரைவா வாசவன்கோ; — காமாரி
ஏந்துகைக்கும் ஒவ்வா இளமான் — இளமயோர்கள்
மாந்துதற்கும் எய்தாத வானமுதம்; — வேந்தாகம்
சொல்லாத ஓலை; மேகம் சேராத மின்; பழத்துச்
சொல்லாத இன்னாச் சுவைப்பேடு; — வெல்லா
மேவாத பாவலர்க்கும் நல்லினைக்கும் காமன்
கவிதைக்கும் எட்டாக் கவிதை — சுவை பெற்ற
நீயம்; தொடாத தேன்; உதவாங்கு மொழி;
தாமம் தணிக்கும் தணிமருந்தும் — பாயும்

* காமாரி — சிவன்; மாந்துதல் — உண்ணுதல்; பேடு — பெண் பறவை; தாமம் — தாகம். *

(3)

கொம்பு நல வைத்தவேர்த்து மெய்க்கேள்வி என்னும்
குலம்பதவி தந்தெனும் செல்வம்; — உவப் பொலிந்த
தண்டவட்ட வெண்மதியைத் தீது, அறுகால் வளர்ந்து
கண்டமர்ந்தும் மெத்தக் கறுப்பாகி — மண்ணுயிர் செவ்
வந்திக்கோ சம்புயர்ந்து வண்ணமலர் சாடைமாய்,
அந்தப்புண் ஆகம் அணைந்தனை — அந்தவே

நல்லொழுக்கம், வாய்மை, நிறை, அன்பு
ஒழுக்கம்; நிலையும் கல்வி [illegible]
ஒழுகல் வாய்மையும் நிலை செல்வம்
கூட வென்று பெற்றுத் தெரிவது
காமம்

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகம்."

* — பனம்பாரனார்.

நீலத் திரைக்கடல் ஓரத்திலே — நின்று
நித்தம் தவம் செய் குமரி எல்லை — வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு

* * பாரதி *